Nanguneri Taluk—Co-operative Jurisdiction.

*281 Q.—THIRU T. GANAPATHY: Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there is any proposal with the Government to transfer Nanguneri taluk from the jurisdiction of Co-operative Circle Sub-Registrar at Tuticorin to the jurisdiction of Co-operative Circle Sub-Registrar at Tirunelveli, considering the administrative convenience?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: இப்படிப்பட்ட செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

பனைவெல்லம் ஏற்றுமதி.

*282 வினா—திரு. கே. எண். குமாரசாமி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு பனைவெல்ல கூட்டுறவு சங்கத்தின் மூலம் வெளிநாடு களுக்கு பனைவெல்லம் ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் என்றால், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, பனைவெல்ல உற்பத்தி யானது மேலும் வலிவுள்ளதாக ஆவதற்கும், பனைவெல்ல உற்பத்தியாளர்கள் வியாபாரத் தொடர்பை அதிகரிப்பதற்கும் ஆன முயற்சிகளை அரசாங்கம் மேற் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, பதனீர் இறக்கி, அதைக் கொண்டு பனைவெல்லம் உற்பத்தி செய்வதில் புதிய முறைகள் வந்துள்ளன. பனைவெல்ல உற்பத்தியாளர்களுக்கு மத்திய வங்கியின் மூலமாக கடன் உதவி செய்து தரப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, பனைவெல்லம் தமிழகத்தில் புராதனமாக உற்பத்திச் செய்யப்படுகிற பொருளாக இருக்கிறது. இன்றைக்கு அரசு செய்யக்கூடிய உதவிகளைவிட இன்னும் அதிகமாக உதவி செய்து, உற் பத்தியை அதிகரிக்க தக்க ஏற்பாடுகளைச் செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, முன்னால் இதற்கு கிராமக் கைத்தொழில்கள் அமைப்பு மூலம் 2 கோடி ரூபாய் கடன் கொடுக்கப்பட்டது. அதில் சுமார் ஒன்றே முக்கால் கோடி ரூபாய் வாராக் கடனாக, திரும்பி வரவில்லை. ஆகவே, புதிய முறையில், ரிசர்வ் வங்கியிலிருந்து கடன் பெற்று, அதை மத்திய வங்கியின் மூலமாக, முன்னைவிட இரண்டு மடங்கு உதவிகளை, அரசு செய்து வருகிறது.

திரு. த. சோனையா: தலைவர் அவர்களே, கருப்பஞ்சாற்றிலிருந்து எடுக்கப் படுகிற வெல்லம் ஏற்றுமதி மூலம் எந்தெந்த வெளிநாடுகளுக்குச் செல்கிறது?

அப்படிச் செல்லவில்லையானால், இப்போது அதிகமாக உற்பத்திச் செய்யப் படுகிற வெல்லத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அரசாங்கம் திட்ட மிட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி பனைவெல்லத்தைப்பற்றியது, கரும்பிலிருந்து எடுக்கப்படுகின்ற வெல்லத்தைப் பற்றிக் கேட்பதாகயிருந்தால், அதற்கு தொழில்துறை அமைச்சர் அவர்கள் தான் பதிலளிக்க வேண்டும்.

திருமதி ஜோதி. வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, பனைவெல்லத்திலிருந்து பல பொருள்கள் செய்கிறார்கள். இவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்குப் பெரும் வாய்ப்பு இருக்கிற காரணத்தால் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வார்களா ? வங்கியில் பணம் கடனாகப் பெற்ற காரணத்தால், உற்பத்தியாளர்கள் தங்களுடைய உற்பத்தியை கோவாபரேடிவ் சொசைடி மூலமாகத்தான் விற்க வேண்டுமென்று ஏதாவது நிபந்தனை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, பனைவெல்ல உற்பத்தியை கூட்டுறவுத் துறையில் நடத்தியபோது, பனைவெல்லத்தின் விலை ஏறுமானால் அதன் லாபம் தங்களுடையது என்று சொன்னார்கள். விலை இறங் குமானால் நட்டம் கூட்டுறவுத் துறையின் தலையில் வைக்கப்பட்டது. இதன் காரணமாக ஒன்றே முக்கால் கோடி ரூபாய் வாராக் கடனாக இருக்கிறது. இப் போது புதிய முறையில், ரிசர்வ் வங்கியிடமிருந்து கடன் பெற்று, அதை மத்திய வங்கியின் மூலமாக, கொடுக்கின்ற கடன் திரும்பி வருகின்ற முறையில், கொடுப்பதற்கான வழிவகைகளைச் செய்திருக்கிறோம்.

திரு. இரா. இராமலிங்கம் : தலைவர் அவர்களே, பனையிலிருந்து கிடைக்கும் பனைத் தும்பு, ஈர்க்கு போன்ற பொருள்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக ஏற்றுமதி செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, பனைத் தும்பும், ஈர்க்கும் அவ்வாறு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

கள்ளிறக்குவோர்களுக்கு இழப்பீடு

* 283 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விபத்துக்குள்ளாகும் தென்னை மரமேறும் தொழிலாளிகளுக்கு நஷ்டஈடு கொடுக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : தலைவர் அவர்களே, தற்போது மதுவிலக்கு ரத்து செய்யப்பட்ட காரணத்தால் லட்சக்கணக்கான தொழிலாளிகள் தென்னை மரம் ஏறக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுடைய பாதுகாப்புக்கு ஊக்கம் கொடுக்கிற நிலையில், விபத்துக்குள்ளாகிற தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது பற்றி அரசு மறுபரிசீலனை செய்யுமா ?